தத்துவபோதினி.

பு. ௩.] சென்னைப்பட்டணம் ௧௮௬௬ௌ செப்டம்பர்மீ ௭௳. [இல. ௫.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, சாந்தம் சிவமத்வைதம், தஸ்யோ
பாஸநயா பாரத்ரிகமைஹிகஞ்ச சுபம் பவதி, தஸ்மிந்
ப்ரீதிஸ்தஸ்ய ப்ரியகார்யஸாதநஞ்ச ததுபாஸநமேவ.

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

		பக்கம்.
௧.	கடவுள்துதி	௮௧
௨.	விளம்பரங்கள்	௮௨
௩.	தெலுங்கு தத்துவபோதினி விளம்பரம்	௮௩
௪.	தத்துவபோதினி	௮௪
௫.	பகவத்கீதை	௮௭
௬.	உபநிஷத்து	௮௮
௭.	மநுநூல்	௮௯
௮.	மாதுருவாச்சல்லியம்	௯0
௯.	பிரம்மதருமம்	௯௧
௧0.	அமிர்தவசனி	௯௩
௧௧.	தஞ்சைநகரம்வேதஸமாஜநிருபம்.	௯௫
௧௨.	நிருபம்	௯௮
௧௩.	சமாஜவந்தனம்	௯௯

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

இராகம் - கேதாரகௌளம் - சாப்புதாளம்.

பல்லவி.

ஏதுகாரணமோ - நீயொளிந்திருப்பது
ஏதுகாரணமோ.

அனுபல்லவி.

ஏதுவின்றிநீ - யாதுஞ்செய்யாயே............(ஏது.)

சரணங்கள்.

க. பாவனைக்குவெகு - பக்தராய்விளங்கும்
பாவிகள்நெஞ்சைப் - பரிக்ஷிக்கவோவே...............(றேது.)

உ. வஞ்சகருணைமிகக் - கெஞ்சித்தொந்தரித்து
பஞ்சையாக்குவாரொன் - றஞ்சாவிடில்பின்............(னேது.)

ந. பொல்லாதபாவிகள் - எல்லாருமாயுனைக்
கொல்லுவாரொன்றே - யில்லாவிட்டால்வே............(றேது.)

ச. மோசக்காரர்வெகு - பசாங்கடிக்கநீ
யாசகனுகவோ - கூசற்படுவாய்வே....................(றேது.)

ரு. வியக்கரியஉன்முச் - செயலைமனிதரும்
பயிற்றுவாரொனும் - பயமில்லாவிடில்வே.............(றேது.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்........................க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்..... ....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர்க்குச் சந்தாவீதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்க்காக,ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0
தபால்கூலி........... 0 - க - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ச - 0
தபால்கூலி........... 0 - க - 0

வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம்·விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது ஒன்றாய் பயிண்டுசெய்தது,............ 0 - ௮ - 0

தபால்கூலி............ 0 - ௨ - 0

ஷ மட்டபயிண்டுள்ளது... .. 0 - ௭ - 0

தபால்கூலி............ 0 - ௨ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது.......... 0 - ௮ - 0

தபால்கூலி............ 0 - ௨ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - ௧ - 0

தபால்கூலி............ 0 - ௧ - 0

௲௮௬௫ஹூ மேமாசம் முதல் ௧௮௬௬ஹூ எப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ...... ௩ - 0 - 0

தபால்கூலி......... .. 0 - ௪ - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

நிரூபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, ௨௰வ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி தூஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்தசிந்தையுடன் தங்கள்கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

விளம்பரம்.

தெலுங்கு தத்துவபோதினி.

தத்துவபோதினி என்னும் இப்பத்திரிகை, தமிழில் பிரசுரஞ் செய்வதுபோலவே தெலுங்கிலுமொன்று இயற்றக் கருதியிருக்கிறோம். இத்தெலுங்குதத்துவபோதினியும் தமிழைப்போலவே சுமார் பதினாறுபக்கங்களை அடங்கியதாயிருக்கும். விஷயங்களும் சற்றேறக்குறைய தமிழ்பத்திரிகைபோலவே யிருக்கும். கடவுள் அநுக்கிரகஞ்செய்வாராகில், வருகிற நவம்பர்மாதம்முதல் இதைப்பிரசுரஞ்செய்ய எண்

ணியிருக்கின்றோம்.ஷ நவம்பர்மாத
முதல்,முதல்தேதிதெலுங்குபத்திரிகை
யும் கடு-உ தமிழும்அச்சிடவேண்டிய
தாயிருக்குமாதலால்,வர்த்தகருக்கும்ம
ற்றுமுள்ள ஜனங்களுக்கும் உபயோக
ப்படத்தக்க தேச வர்த்த மானங்களை
யும், அகவிலை முதலிய பலசங்கதிகளை
யும்சேர்க்கயோசித்திருக் கிறோம். இத்
தெலுங்கு தத்துவபோதினி, நவம்பர்
முதல்எப்ரல்வரையில், ஆறுமாதத்துக்
கு முதல்புத்தகம் முடித்து மேமாத
ந்தொடங்கி, இரண்டாவதுபுத்தகமாக
ச் செய்யக் கருதுகின்றோம். இவ்வா
று மாதத்துக்கு. முன் கொடுக்கப்பட
வேண்டிய சந்தாவிவரம்.

அரைவருஷசந்தா...... 0 - ௧௨ - 0
தபால்கூலி.. ...... 0 - ௬ - 0

சந்தாசெய்ய இஷ்டமுள்ளவர்கள்
கூடிய சீக்கிரத்தில் அறிவிப்பார்களெ
ன கேட்டுக்கொள்ளுகிறோம்.

தத்துவபோதினி.

சோதரர்களே !

விழித்துக்கொண் டிருப்பதுபோல
வே தூக்கத்தில் சஞ்சாரஞ் செய்யப்பட்
ட சிலரைப்பற்றி கேட்டிருப் பீர்கள். ஆ
யினும் சற்று யோசிக்கில் நாமெல்லாரும்
பெரும்பாலுந் தூக்கமுடையவர்களே ! நி
ஷ்களங்க ஞானசூரியன் அஸ்தமித்து, மா
யாந்தகாரங்கள்மேற்பரவ அநித்தியமும் க
ளங்கமுமுள்ள சிற்றின்ப சந்திரபிம்பத்
தைஉண்மையெனநம்பிஅதன் தண்ணில
வாகியசந்தோஷத்தினல் மகிமயங்கிமோ
கநித்திரைசெய்யும் ஆத்மகோடிகள்கனவி
ற்கண்டதெல்லாம் உண்மையெனநம்பிசத்
தியத்தைநழுகவிட்டு,அசத்திய மார்க்கங்
களில் பிரவேசித்து கண்டதெல்லாம்பே
யென வீண்திகிலடைந்து, பிரமிப்பதை
க்கண்டல்லவோ,சுருதி "𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤"
"விழித்துஎழுந்திருங்கள்" எனஎச்சரிக்கி
ன்றது. சாக்கிரதையில் நித்திரையும் நித்
திரையில்சாக்கிரதையும் மனிதருக்கு ஸ்
வபாவமாயுள்ளவைகள். இவ்விபரீதத்து
க்கொருவாறு நமதுபிரகிருதியேகாரண
மாகும். நமதுசரீரத்தைக்கொண்டு உல
கத்தோடு சம்பந்த படுத்துகிற பிரகிரு
தியின் முக்கியகுணமாவது சென்றவழி
யில் செல்வதும் நின்றவிடத்தில் நிற்பது
மாகும். இதற்கு தன்னைத்தான் அறியுந்த
ன்மை, யில்லையாயினும்தன்னை அறியும்அ
றிவை, மயக்கி தானதுவாகவிளங்கும் வ
ன்மையுண்டு. உவற்புள்ள கடலோடுசே
ரும் கங்கையானது தன்ஸ்வபாவம் மாறி
அதன் ஸ்வபாவத்தை யடைவது போல்
ஆன்மகோடிகள் பிரகிருதியோடு சம்பந்
தப்பட்டு அதன்ஸ்வபாவத்தை ஒருவாறு
அடைகின்றன. நீங்காநித்திரையேபிரகிரு
தி ஸ்வபாவமாகும். அந்நித்திரையே ஆ
ன்மகோடிகளையும் அடைந்து பீடிக்கின்
றது. நமதறிவானது, ஆகாரமும்அளவும
ற்று அதிருவமானதாயிருந்தும், விஷய
ப்பற்றினின்றதைவிடுத்துவதசாத்தியமா
கும். முதலில் தன்னையும் இவ்வறிவுபிர
கிருதியோடு சம்பந்தப்பட்டதாய் காண்
கின்றதேயன்றி, தன்னைத்தனியேகண்ட
றிந்ததில்லை. இவ்வுடலிலுள்ளஒருபாகமு
ம் தானல்லாவிடினும், இவ்வுடலோடு ச
ம்பந்தப்பட்டிருப்பதாகவே தன்னை யறி
கின்றது. இவ்வறிவின் பிரதிதொழிலும்,
இச்சம்பந்தமின்றி நடவாதுபோலும் கா
ணகின்றது. இஃதெவ்வாறெனில், நாம்வ
ஸ்துக்களை அறிவதற்கு நாமங்களும், அந்
நாமங்களையுணர்த்தும் சப்தங்களும் அத்
தியாவசியகரமாயிருக்கின்றன. இந்நாமங்
களும், சப்தங்களுமின்றி ஒருகருத்தாவ
து புலப்படுவதில்லை ; மனனமாகிய ஓர்
தொழிலும் அறிவில் ஜனிப்பதில்லை. கே
வலம் நிர்விஷயமானவும் மான சிகமன
வும் யாதொருகருத்தும் நாம சப்தங்க
ளின்றி, மனதிற்படுவதில்லை. அறிவைவி
ட அதிருவமானதொன்றையுங் காண்கி
லோம். இவ்வறிவையும் நாமமும்சப்தமு
மின்றி அறியக்கூடவில்லை. இவ்வாறு ந
மது ஸ்வபாவத்தினல்தானே அல்லது,
பழக்கத்தினலோ, பிரகிருதி யோடு நா
ம் சார்வதா சம்பந்தப்பட் டிருக்கின்
றோம். இச் சம்பந்தம் ஆவசியகமா

அனுவசியமா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டியதில்லை. அபரமித ஞானதேஜனாகிய கடவுளுடைய அருளினால் இச்சம்பந்தமுண்டாயிருக்க வேண்டுமாகையால் இஃது ஆவசியகமென்றே நாம் நிராக்ஷேபமாகக்கொள்ளவேண்டும். இச்சம்பந்தத்தாலுண்டாகும் நன்மைதீமைகளைப்பற்றிவிசாரித்து அக்கடவுளால்கருதப்பட்ட பயனையடையமுயல்வதே நமது கடமையாகும். நமக்கிவ்வுலகத்திலுள்ள சகலசுவானுபவங்களுக்கும்,பரலோகவாழ்க்கையின்பொருட்டு,செய்யப்படும், சகலமுயற்சிகளுக்கும், இப்பிரகிருதிசம்பந்தம் அத்தியாவசியகரமாயிருப்பதால்,இதனால், நன்மையுண்டோவென்பதை விசாரிக்கவேண்டுவதில்லை. இப்பிரகிருதிசம்பந்தம் நீங்கினால், வேறெவ்வித உபகரணங்களைக்கொண்டு, கடவுள் நமதறிவை விளங்கச்செய்வாரோ நாமறிகிலோம். ஆயினும் தத்காலத்தில் இப்பிரகிருதிசம்பந்தமின்றி நமதறிவு விளங்காதென்பதைக் காண்கிறோம். ஆகையால் இப்பிரகிருதிஜனிதமான மோகநித்திரையென்னும் திமையைப்பற்றி விசாரித்து இதினின்றும் விழிக்கச்செய்ய வகைதேடுவோம். இம்மோகத்துக்குக்காரணமும், இம்மோகத்தினின்றும் விலகவழியும் மற்றொரு சுருதிவாக்கியத்தினால் காணலாம். (கடோபநிஷத்து-௪-வது-வல்லி-௧.) "வெளியிலுள்ளவஸ்துக்களைக்காணும்பொருட்டு கடவுள் விஷயேந்திரியங்களைச்சிருஷ்டித்தார். ஆகையால் அவைகளுக்கு பாஹ்யவிஷயங்களைக்காண்பதே சுலபமாய் நித்தியமான ஆத்மாவைக்காண அருமையாகின்றது. ஆயினும் புத்திவான் நித்தியவாழ்க்கைவிரும்பினவனாய் விஷயேந்திரியங்களை அவைகளுடைய ஸ்வபாவ கதியிற் செலுத்தாமல் இழுத்துக்கொள்வதினால் எங்குமுள்ள பரமாத்மாவை யறிகின்றான்." இச்சுருதி யுரைக்குமாறு பிரகிருதியைப்பற்றும் நமது விஷயேந்திரியங்களே, இந்நித்திரைக்குக் காரணமாகும். இவற்றின்பிரேரேபணையினால் நாம் விஷயங்களை உள்ளபடியறியமாட்டாமல் ஒன்றைவிட்டொன்றாக பாவிக்கநேரிடுகின்றது. இவ்விஷயத்தைஇரண்டொரு உதாரணங்களால் விளக்குவோம். பசிவருத்தத்தை நீக்கி தேஹத்தைப் போஷிக்கவன்றோ முதலில் யாவரும் உணவைத்தேடுகின்றனர். ஆயினும் இவ்வுண்மையைமறந்து ருசியினால் மோஹமடைந்து பின்பு உணவைஉணவின்பொருட்டேதேடுவதும், தேஹசவுக்கியத்தை யெவ்வளவும் பாராட்டாமல், விஷயபோகத்தில் மூழ்குவதுமருமையன்றே. ஆத்மாவின்பொருட்டு தேஹத்தைப் போஷிக்கவேண்டியதாயிருக்க தேஹத்தை தேஹத்தின் பொருட்டே, காப்பாற்றுவதுபோலவே, வஸ்துக்களை தேஹசம்ரக்ஷணார்த்தம், சம்பாதிப்பதை விட்டு, அவ்வஸ்துக்களை அவைகளின்பொருட்டேவிரும்பி அடைந்தும், அவைகளை உபயோகப் படுத்திக் கொள்ளாதவர்களுமுண்டு. நமதுசரீர போஷணைக்கும் சுக சந்தோஷங்களுக்கும் வேண்டிய திரவியங்களைச்சம்பாதிக்கபணம்ஆவசியகமாயிருக்கின்றது. இப்பிரயோசனத்தைத்தவிர்த்தால் பணத்தாலாகும்காரியம் ஏதாவதுண்டோ? அன்றியும் இப்பணத்தை, தமது சரீரரக்ததுளிபோல் பாவித்து பெறுமுயற்சியோடு ஈட்டிவைத்திறக்கும்மானிடர்எத்தனைபேர். சர்வ காருண்ணியராகிய கடவுளையுணர்த்துவதாகஓங்கார முதலியபல நாமங்களேற்பட்டிருந்தும் அப்பரம்பொருளைமறந்து இந்நாமங்களையே விசேஷமாகக்கொள்ளுவோர் எத்தனைபேர். அப்பரமாத்மாவின் மகிமையும் பெருமையும் பலபூதங்களிடத்துப்பலவாறாக விளங்குவதை வேதமுரைத்திட, அப்பூதங்களையேதெய்வமாகக்கொள்ளுவோர் எண்ணிறந்தவர்கள். கடவுளுடையஇருப்பையுணர்த்தி பாமரருக்கு பக்தியுண்டாக்க கோயில்களும் விக்கிரகங்களும்ஏற்பட,இக்கோயில்களையும்விக்கிரங்களையும்பொருட்டாகஎண்ணுவோரைகணக்கிட்டுமுடியுமோ? இக்கோயில்களுள், நமதுபணிவையும் தாழ்மையையும் உணர்த்தும்பொருட்டு சடகோபமென்பதையுண்டாக்க இச்சடகோபத்திலேதோமகிமையிருக்கிறதென்று கருதி, இதை மற்ற விக்கிரகங்க

ள் தலைமேல்வைக்கத் தலைப்படுகின்றனர். இவ்வாறு மனிதர் முன்கால்களால்பற்றி, பின்கால்களால்தொத்திபின்செல்லும் புழுக்களைப்போல், கருதியபயனைமறந்து, அப்பயனையடைய பிரயோகிக்கப் படும் உபகரணங்களை பயனுக்கக்கருதிபிரமித்து, படிபடியேஇரங்கி மஹத்தான தாமஸத்தில்மூழ்கி தம்மையும் தமதுவாழ்க்கையின்பயனையுமறந்து, மோகத்துக்காளாய் மயங்கி நித்திரை செய்கின்றனர். இந்நித்திரைமயக்கத்தினால் கண்டதொன்றாயிருக்க கனவிலொன்றாகபாவித்து விபரீதத்தை விளைத்துக் கொள்ளுகின்றனர். இம்மோகநித்திரை மயக்கத்தினாலன்றோ அறத்தையும்மறத்தையும்பாராமல் அளவற்ற திரவியத்தைச்சேர்க்கமுயல்கின்றனர். இம்மயக்கத்தால்செருக்குற்று, தமதுநித்தியசுகத்தைமறந்து, பிறரைவஞ்சிப்பதும், தூஷிப்பதும், துன்பப் படுத்துவதுமே மேன்மையானதொழிலாகபாவிக்கின்றனர். இம்மருட்சியினாலன்றோ கண்டதெல்லாம் தெய்வமென்றுநம்பி கடாவெட்டிபூஜை செய்கின்றனர். இவ்வளவுவிபரீதத்துக்கும் காரணமாயிருப்பது விஷயாபேக்ஷையும், விஷயாபேக்ஷையினால் ஜனிக்கும்மோஹமுமாயிருத்தலால், இம்மோஹம், அல்லது அஞ்ஞானநித்திரையினின்றுவிழித்துக்கொள்ளும்படி, சுருதிகூறுகின்றது. இம்மோஹத்தினின்றும்விழித்துக்கொண்டாலொழிய இதனால்விளையும்விபரீதத்தைக்காண்பதரிதாகும். இம்மயக்கத்துக்குக்காரணம் விஷயேந்திரியங்களென்றுணர்த்தினோம். இவ்விஷயாபேக்ஷை மீண்டுமீண்டு நம்மை மயக்கத்தி லாழ்த்துகின்றது. சரீரபோஷணார்த்தம் பிரதிதினமும் உண்ணவேண்டியதா யிருக்கின்றது. ஆயினும் பிரதியுணவினாலும், ருசியென்னும் மோகத்துக்காளாகி, பதார்த்தமே பொருளாகபாவிக்க நேரிடலாம். நமதாத்மாவின்பொருட்டுச் சரீரத்தைப் போஷிக்கவேண்டியதாயிருந்தும், இச்சரீரத்தைபோஷிக்குந்தோறும், ஆத்மாவை மறந்து, சரீரத்தையே பொருளாக கருதுகின்றோம். நித்தியமான பரலோக சுகத்தின் பொருட்டு கடவுளெமக்கிந்தவாழ்க்கை யருளியிருந்தும், இவ்வாழ்க்கை யனுபவிக்குந் தோறும் அக்கடவுளையும் அப்பேரானந்தத்தையும் மறந்து, இவ்வுலகவாழ்க்கையேபெரிதென்கிற நினைவுமேலிடுகின்றது. இவ்வாறு இவ்வுலகத்திலொவ்வொருநிமிஷமும்விஷயாபேக்ஷை நமது ஞானக்கண்களை மயக்கி, அஞ்ஞான நித்திரைக் காயுத்தப்படுத்துகின்றது. சார்வதா விழித்து சாக்கிரதையாயிருந்தாலொழிய இம்மயக்கத்தைவெல்லுவது அசாத்தியம். இந்நித்திரைநீக்கசாதனம் அப்பரமேஸ்வரனுடைய ஞானமன்றி வேறொன்றுமில்லை. ஆகையால் இச்சுருதியுடனே “ప్రాప్యవరాన్నిబోధత.” “ஸ்ரேஷ்டமானவர்களை யடைந்து பிரம்மஞானத்தை யடையுங்கள்” என்றது. அப்பரமாத்மாவையறிந்து அவனதுநித்திய ஆநந்தத்தை விரும்புவதன்றி வேறெதனாலும் நமதுவிஷயப்பற்றுநம்மைவிடாது. அப்பரலோகசுகத்தை நாடினாலொழிய, இஹத்தில் நமக்கு ஜனிக்கும்விபரீதமான அபேக்ஷை நீங்கமாட்டாது. அவனருளியஞானத்தாலன்றி, நமதுசரீரபாசங்களை வென்று ஆத்ம உஜ்ஜீவனத்தைத்தேடிக் கொள்வதரிதாம். இவ்வாத்மக்கியான மில்லையாயின், விஷயங்களை அவற்றின்பொருட்டுவிரும்பநேரிடும். இவ்வாத்மக்கியானமில்லையாயின் விஷயாபேக்ஷையைவென்றுமோஹநித்திரையைநீக்குவதசாத்தியம். இஞ்ஞானத்தினால் விஷயங்களைஎவ்வாறு வெல்லக்கூடுமென்பதை இரண்டொருஉதாரணங்களால் உணர்த்துவோம். நான்ஜீவனார்த்தம் ஒருவர்த்தகனிடத்தில்சேவகஞ்செய்கின்றேன். அவ்வர்த்தகன்என்னைநம்பிசிலதிரவியங்கொடுத்துசரக்கு வாங்கச் சொல்லுகின்றான். அவன் என் பின்னோடுவந்து பார்க்கப்போகிறதில்லை. இச்சரக்கு வகை என்னிஷ்டப்படி வாங்கி நானதிக லாபமடைந்து என் எஜமானனை மோசஞ்செய்யலாம். எனக்குள்ள விஷயாபேக்ஷயானது எனதறிவைமயக்கி, மோசத்தைநினைக்கச்செய்யலாம். இம்மோசத்துக் குள்ளாயினேனாகில், விஷயத்தையேபாராட்டிசத்தியத்தையதிக்கிரமித்தவனாகின்றேன். அச்சத்திய

த்தையேவிரும்பிய கடவுளையவமதித்தவனுமாகின்றேன். இதனாலுண்டாகும்பாபத்தைப்பற்றி விசாரிக்கவேண்டுவதில்லை. இதனால்விளையும்பாமரத்தைமாத்திரம் சற்றுவிசாரிப்போம். இதனால்விஷயமென்னுஞ்சத்துருவுக் கென்னிருதயத்திலோரிடங் கொடுக்கின்றேன். இவ்விஷயாபேக்ஷைவெல்லவழியுண்டு; அஃதாவது என்மனதிலுநித்தவஞ்சனை, என்னையும்நான்யாரைவஞ்சிக்கத்துணிந்தேனோ, அவனையும்சமமாகபாவித்தருளும்கடவுள் அறிந்திருக்கிறார்என்னும் ஞானமென்னிடஞ்ஜனிக்குமாயின்,அப்பாவத்தையான்செய்யாதொழியக்கூடுமல்லவா! சற்றுயோசிப்போமாயின் நமதுவாழ்க்கையில் ஒவ்வொருகணமும்பாபத்துக்கேதுவாயசந்தர்ப்பம்நேரிடுகின்றது. இச்சந்தர்ப்பமொவ்வொன்றும் பிரமஞானத்துக்கும் விஷயமோகத்துக்கும், போராகும். இப்போரில்முற்கூறியது ஜயிக்குமாயின் இதனால் சத்தியமும்மோக்ஷத்துக்கு மார்க்கமுமேற்படுகின்றது. பிற்கூறியது ஜயிக்குமானால் தாமசத்திலாழ்ந்துகின்றோம். இஃதிடைவிடாதபோராகும். ஒவ்வொரு கணமும்விஷயங்களினால் நமதுஞானத்துக்கு அழிவு நேரிடுமாகையாலும், "க்ஷுரஸ்ய தாரா நிஶிதா துரத்யயா துர்க்கம் பதஸ்தத் கவயோ வதந்தி." "இந்தஞானமார்க்கம், இப்பரமனையறிந்துகொள்ளும் வகை கத்தியின்முனையில் நடப்பதுபோல் வெகு சடினமானதென்று சான்றோர் சொல்லுகிறார்கள்." என்று சுருதி அவ்வாக்கியத்தை முடித்தது. ஆகையால் அப்பரமாத்மாவை வழிபட்டு, அவரதுஅருளினால் விழிக்கப்பெற்றவராய் ஒவ்வொருகணமும் மோகத்துக்கிடங்கொடாமல் பாபத்தைத்தவிர்த்துப் பரலோகத்தை நாடுவோமாக.

பகவத்கீதை.

(தொடர்ச்சி.)

௬௧. ஓய் அர்ஜுனா! ஈஶ்வரன் சமஸ்தபிராணிகளுடைய இருதயத்தில் வீற்றிருந்து ஓர் உருளையானயந்திரத்திலேற்றப்பட்டதுபோல் எல்லாவற்றையுஞ் சுழலச்செய்கின்றனன்.

௬௨ ஓய் பார்தா! எந்தஸ்திதியிலும் அவ்வீஶ்வரனைச் சரணமடைவாய். அவ்வீஶ்வரனுடைய அநுக்கிரகத்தால் உத்கிருஷ்டசாந்தியாகிய நித்தியபதவியை அடைவாய்.

௬௩. இவ்வாறு உன்பொருட்டு இரகசியத்திலும் ரகசியமாகிய கியானம் என்னால் சொல்லபட்டது. இதை தீர்கமாயோசித்து உன்னிஷ்டப்படி நடப்பாய்.

௬௪. மீண்டும் சர்வத்திலும் அதிரகசியமானவும், பரமானவும் என்வசனத்தைக்கேட்பாயாக. நீயெனக்கு நிஜமாக இஷ்டனாகையால் உன்பொருட்டு ஹிதோபதேசஞ்செய்கிறேன்.

௬௫. என்னிடத்தில்மனமுடையவனாயும் என்னிடத்தில்பக்தியுடையவனாயும், என்னையேபூஜிக்கிறவனாகவும், ஆவாய். என்னை நமஸ்கரிப்பாய். என்னையே அடையக்கடவாய். எனக்குப்பிரியனாயினை. உன்பொருட்டுசத்தியமாய் பிரதிக்ஞைசெய்கிறேன்.

௬௬. சமஸ்த கருமங்களையும்விட்டு, ஒருவனாகிய என்னை சரணமடைவாய். நான் உன்னை சர்வபாபங்களினின்றும் விடுவிக்கமாட்டுவேன். துக்கப்படவேண்டாம்.

௬௭. உனக்கு சொல்லப்பட்ட இப்பிரம்மஸாஶ்திரத்தைத், தபசற்றவனுக்கும், பக்தியற்றவனுக்கும், கேளாதவனுக்கும், என்னிடத்தில் அசூயை யுள்ளவனுக்கும், ஒருபொழுதுஞ் சொல்லவேண்டாம்.

௬௮. எவன் இப்பரமரகசியத்தை என்பக்தர்களின்பொருட்டுச்சொல்லுகிறானோ, அவன் என்னிடத்தில் விசேஷ பக்தியுடையவனாய் என்னையேஅடையக்கடவன்.

௬௯. அவனைப்பார்க்கிலும் மனிதர்களில் எனக்கு விசேஷபிரீதிசெய்பவன் ஒருவனுமில்லை, அவனைப்பார்க்கிலும் அதிகபிரியனாகத்தக்கவன் வேறொருவனுமில்லை.

௭0. எவன் (பிரம்ம) தருமத்தைப் பற்றிய இச்சம்வாதத்தை அத்தியயனஞ்செய்கிறானோ அவன் என்னைக்கியானமார்க்கத்தால் பூஜிப்பான் என்பது என்னுடையநிச்சயம்.

௭௧. எவன் இதை ஶ்ரத்தையுடையவனாயும், அசூயாரஹிதனாயும், கேட்கின்றானோ அவனும் முக்தனாய் சுபகரமான புண்ணியகர்மங்களைச்செய்வோருலகத்தை யடைவான்.

௭௨. ஓய் பார்த்தனே! உன்னால் ஒரோநிச்சயமுடையமனதுடன் இது கேட்கப்பட்டதா? ஓய்தனஞ்ஜயா! உன்னுடைய அக்கியா

னத்தால்விளைந்த அவிவேகம் நீங்கிற்றா ?

அர்ஜுனன்சொல்.

௭௩. ஓய்அச்சுதனே ! நினதனுக்கிரகத்தால் அவிவேகம்நீங்கிற்று, அறிவடையப்பட்டது, நான் சந்தேஹம் நீங்கினவனானேன். நினதுசொல்லைச் செய்யக்கடவேன்.

சஞ்சயன்சொல்,

௭௪. இவ்வாறு வாசுதேவனுடையவும், மஹாத்மனாகிய பார்த்தனுடையவும் ஆச்சரியகரமானவும் ரோமஹருஷகரமானவும், இச்சம்வாதத்தை நான்கேட்டேன்.

௭௫. வியாஸரனுக்கிரகத்தினால்யோகமென்னப்படும் பரமான இந்தரகசியத்தை, தானே பிரத்தியக்ஷமாகசொல்லும்யோகேசுவரனாகிய கிருஷ்ணனால் கேட்டவனானேன்.

௭௬. ஓய் அரசனே ! ஆச்சரியகரமானவும், பவித்திரமானவும், கிருஷ்ணார்ஜுனர்களுடைய இச்சம்வாதத்தை நினைத்து நினைத்துச்சந்தோஷமடைகின்றேன்.

௭௭. ஓய்அரசனே ! அதிஅத்புதரான அரியினுடைய விசுவரூபத்தைச்செம்மையாகத் தியானிக்கதியானிக்க எனக்கு அதிகமான ஆச்சரியமுண்டாகின்றது. மீண்டுமீண்டும் மயிர் சிலிர்க்கின்றது.

௭௮. எந்தபக்ஷத்தில் யோகேசுவரனான கிருஷ்ணனும், எந்தபக்ஷத்தில் தனுர்தரனான பார்த்தனும், இருக்கிறார்களோ அந்தபக்ஷத்தில் சம்பத்தும், விஜயமும், ஐசுவரியமும், ஸ்திரமானநீதியும், ஆம் என எனது நிச்சயம்.

பாகவத்கீதை முற்றிற்று.

தைத்தரீயஉபநிஷத்து.

சீக்ஷாவல்லி.

௯ - ம் - அநுவாகம். †

௧. ஹ்ருதயத்திற்குள்ளிருக்கும்வானத்தில்,— ‡ அதில் (அவ்வானத்தில்) விஜ்ஞானஸ்வரூபனாகியபுருஷன் (ஆத்மா—ஜீவன்) இருக்கின்றான். (அவன்)அமிருதனாயும், தேஜோமயனாயுமிருக்கின்றான். (ஹ்ருதயத்தின் மேல்புரத்தி லுண்டாகி சிரசின் நுனிக்கிச் செல்லுகின்ற“ ஸுஷுமு்நாடி”என பெயர்பெற்ற) இரண்டுதாலு(வழியாய்ச்செல்லுகின்ற நாடி)களின் மத்தியத்தில்,—ஸ்தனம்போல்கீழ்முகமாய்தொங்குகின்ற (மாம்ஸகண்டத்தினுள்ளே),—தலை, கபாலம், இவைகளைப் பேதித்து கேசமூலத்தில் விபாகமாய் இராநின்ற,—அது (நாடி) இந்திரனுடைய (பிரம்மத்தினுடைய) உத்பத்திஸ்தானம் ஆகின்றது.—(ருஷியானவன்)'பூ:' என்கிற (மறைப்பொருள் சப்தத்தால் பிரம்மத்தின் அங்கபூதமான அதை (முறையே)அக்னியுடன் அடைகின்றான்.—

௨. (மறைபொருளாகிய) 'புவ:'என்பதால்(பிரம்மத்தின் அங்கபூதமானஅதை)காத்துடனடைகின்றான், —(மறைபொருளாகிய)'ஸுவ:'என்பதால் (பிரம்மத்தின்அங்கபூதமானஅதை) ஆதித்தியனுடன் (அடைகின்றான்,) —(மறைபொருளாகிய) 'மஹ:'என்பதால் (பிரம்மத்தின் அங்கபூதமான அதை) பிரம்மத்துடன் அடைகின்றான்;—(அவன்) ஸ்வாராஜியத்தை(ஸ்வர்கத்தின்ராஜியத்தை அல்லது தன்னரசை) அடைகின்றான்,—(அவன்)மனதின் ஆதிபத்தியத்தைஅடைகின்றான், ‡ —(அவன்)வாக்குக்கு பதியாகின்றான் கண்ணுக்கும் பதியாகின்றான், —செவிக்குப்பதியாகின்றான்; ஜ்ஞானத்திற்கும் பதியாகின்றான்,—அதின்பிறகு (அவன்)இப்படி

---

† முந்தியஅநுவாகத்தில் தேவர்களனைவரையும் பிரம்மத்தின் பலஉருப்புகளென மறைபொருளுள்ள சப்தங்களால் விவரிக்கப்பட்டன; இவ்வநுவாகம் ஹ்ருதயத்தின் தகராகாயத்தைப்பிரம்மத்தின்தியானத்திற்கும்உணர்ச்சிக்கும் இடமெனவும், பரமாத்மாவை அறியும்வகை இத்தன்மையதெனவும்விரித்துரைக்கின்றது.

† தாமரைமொக்கினுருவங்கொண்டும், பிராணனுக் கிருப்பிடமும், அனேகநாடிகளால் சுத்தப்பட்டும் மத்தியத்தில் துவாரமுள்ளவும், ஹ்ருதயமென்றுநாமங்கொண்ட தலைகவிழ்ந்த மாம்ஸகண்டத்தின் தகராகாயமென பாஷியகாரர் உரையுரைத்தனர்.

‡ அனைத்தையும் ஆளுகின்றமையால் பிரம்மம் எல்லோர்மனதையும் ஆளுகின்றது ; அதை அடைந்தமையால் மனதின்ஆட்சியை அடைகின்றான்.

க்கு வானவுருவங்கொண்டபிரம்மமாகின்றான்,— அவன்). ஸத்தியமான ஆத்மாவாகின்றான்; ஜீவனோடுக்ரீடிப்பவனும், ஆனந்தமுள்ளமனமுடையவனுமாகஇருக்கின்றான்,—(அவன்)சாந்தியோடுநிறைந்தவனும்.அமிருதனும் (இருக்கின்றான்.)—ஓ? பிராசீனயோக்கியனே! ¶ (பிரம்மத்தை) மேற்கூறியவாறே உபாஸிப்பாயாக.

மநுநூல்.

௨-ம் அத்தியாயம்.

(தொடர்சி.)

௨௩௦. அவர்களே (மேற்கூறிய அம்மூன்றுபெயர்களே)யல்லவா மூன்றுஉலகங்களெனவும், அவர்களேயல்லவா மூன்று வேதங்களெனவும், அவர்களேயல்லவா மூன்றுஆஸ்ரமங்களெனவும் அவர்களேயல்லவா மூன்றுஅக்னிகளெனவும், (என்றால் அவர்களை இவைகளுக்கொப்பாக)உரைக்கப்பட்டன.

௨௩௧. ஜனகபிதாவே'காஹர்வபத்யாக்நி' (விவாஹத்திற்கடுத்த அக்னி) எனவும், மாதாவானவள் 'தக்ஷிணாக்நி' (சடங்குகளுக்கடுத்த அக்னி)எனவும், குருவானவர் 'ஆஹவநீயாக்நி'(எக்கியத்திற்குரிய அக்னி) எனவும்(என்றால்—இவர்களை அவைகளுக்கொப்பாக)பாவிக்கப்படுகின்றன; இவ்வக்னித்திரயங்களே மிகவும் வணங்கத்தக்கவைகளாகின்றன.

௨௩௨. இம்மூன்றையும்இல்லொழுக்கமடைந்தபின்பும்,(கிரகஸ்தாஸ்ரமமடைந்தும்) எவன்மறவாமல் இருக்கின்றானோ மூன்று உலகங்களையும் அவன் ஜயிப்பான்; (என்றால் மூவ்வுலகத்திற்கும் அதிபனாவான்;) பின்னுமவன் தெய்வத்திற்கொப்பாய் விளங்காநின்ற தேஹத்தையும் பெற்றவனாகி ஸ்வர்கலோகத்தில் மிக்க ஆனந்தமடைகின்றான்.

௨௩௩. தன்னுடையமாதாவைபூஜிப்பதால்(மாதுருபக்தியால்)பூலோகத்தை அனுபவிக்கின்றான், பிதாவைபூஜிப்பதினால் (பித்ருபக்தியால்)மத்தியலோகத்தை (ஸ்வர்க்கத்தை) அனுபவிக்கின்றான்; குருவைபூஜிப்பதினால் (குருசுச்ருஷையால்) பிரம்மலோகத்தை அடைகின்றான்.

௨௩௪. இம்மூன்றுபெயர்களையும் பூஜிக்கின்றவனால் ஸகலதர்மங்களும் ஆதரிக்கப்பட்டதாகின்றன; அவர்களைபூஜியாதவனால் செய்யப்படும் எவ்வகை தர்மங்களும் பயனற்றதாகின்றன.

௨௩௫. அம்மூன்று பெயர்களும் ஜீவித்திருக்குமளவும் வேறொரு தர்மங்களையும் (எவ்வகைமனிதனும்) அனுஷ்டிக்கத்தகாதவனாவான்; பின்னுமவன் நாடோரும் அவர்களுககு பிரியமானவும், ஹிதமானவும், கர்மத்தைச் செய்தவனாகி, அவர்களுககுச் சிசுரூஷை நடாத்தக்கடவான்.

௨௩௬. அவர்களின்சிசுரூஷைக்கு விரோதமின்றி பரலோகப்பிராப்திக்காக, மனம், வாக்கு, காயம், இவைகளுக்குரிய எவ்வகைத்தொழில்களைச் செய்திடினும், (அவன்)அவ்வனத்தையும் அவர்களுக்கு அறிக்கையிடக்கடவான்.

௨௩௭. புமான்களுக்கு அம்மூன்று பெயர்களையும் பூஜிப்பதினால் ஸகலதர்மங்களும் செய்யப்பட்டதாகின்றன; முன்கூறியபதே ஸாக்ஷாத் தர்மமெனவும், மற்றவைகளெல்லாம் உபதர்மங்களெனவும் கூரப்படுகின்றன.

௨௩௮. சுபமானவித்தையை அப்பியசிக்கவேண்டுமென ஆவலுடையோன் (மந்திராதிகளை)சூத்திரனிடத்தி லிருந்தாயினும் பரிக்கிரகிக்கக்கடவான்; உத்தமமான தர்மத்தை சண்டாளனிடத்தினின்றும்(பரிக்கிரகித்துக்கொள்ளக்கடவான்;) உத்தமமான ஸ்திரீரத்தினத்தை மிக நீசகுலத்தினின்றும் பரிக்கிரகித்துக் கொள்ளக்கடவான்.

௨௩௯. (கொடியதாகிய) விஷத்தினின்றாயினும் அமிருதம் கிரகிக்கத்தக்கதே

¶ ஓர்சிஷியனுக்கு ஆசாரியன் உபதேசிக்கின்றான்.

யாம்; குழந்தையினிடத்தினின்றாயினும் ஹிதமானவசனம்(ஹிதோபதேசம்) கிரகிக்கத்தக்கதேயாம்; பகைவனிடத்தினின்றாயினும் நன்னடக்கை கிரகிக்கத்தக்கதேயாம். அபரிசுத்தமானதினின்றாயினும் காஞ்சனம் (பொன்) கிரகிக்கத்தக்கதேயாம்.

௨௪0. ஆசையால், ஸ்திரீரத்தினம்,† வித்தை, தர்மம், சுத்தம், ஹிதோபதேசம், மற்றுமெவ்வகை சில்பசாஸ்திரம், இவைகளனைத்தும் ஒவ்வொரு திக்குகளிலும் (தேடி)ஸம்பாதிக்கக் கடவனவாம்.

௨௪௧. பிரம்மசாரிக்கு வேதாத்தியயனம் ஆபத்காலத்தில்(ஆவசியகமானால்)அப்பிராம்மண (னானவனதை எவ்வகைத் விஜ)னிடத்தினின்றாயினும் அடையலாமென விதிக்கப்படுகின்றது; (அவன்)அப்படிக்கு அத்தியயனம் பண்ணுமளவும் யதோக்த (குரு) சிசுரூஷை செய்யக்கடவான்.

௨௪௨. மோக்ஷத்திற்குரிய மேன்மையானகதியை விரும்புவோனாகிய சிஷியனானவன், அப்பிராம்மணனாயினும், அல்லது வேதத்தை ஸாங்கமாய் ஓதாதபிராம்மண ஆசாரியனிடமாயினும் (தன்) வாழ்நாள் முழுதும் வஸிக்கத்தகாதவனாகின்றான்.

௨௪௩. (பிரம்மசாரியானவன்)குருஸமீபம் (தன்) வாழ்நாள்முழுதும், வாஸம் செய்யவிருப்பமுடையவனானால், அவன் மிக முயற்சியுள்ளவனாகி இச்சரீரத்தை யொழிக்குமளவும் அடிமைசெய்யக் கடவான்.

௨௪௪. எவனானால் (பிரம்மசாரி)தன் சரீரத்தை யொழிக்குமளவும் (என்றால் தன்வாழ்நாள்முழுதும்) குருவுக்கு சிசுரூஷை செய்கின்றானோ, பிராம்மணனாகிய அவன் உடனேசாச்வதமாகிய பிரம்ம பதத்தை அடைகின்றான்.

௨௪௫. தர்மத்தை யறிந்த பிரம்மசாரியானவன் தான் வீட்டுக்குப் போகுமுன்னமே குருதக்ஷிணை யொன்றும் கொடுக்கத்தகாதவனாகின்றான்; ஆனால் அவன் ஆசாரியனுடையநியமனம்பெற்று (விருதஸமாவர்த்தன ஸ்நானம் பண்ணப் போகும்பொழுது யதாசக்தியாய் குருதக்ஷிணை கொடுக்கக் கடவான்.

௨௪௬. புலம், பொன், பூஷணம், பசு, குதிரை, கொடை, பாதகுறடு, ஆஸனம், தானியம், உத்தமசாகம் (காய்கறி) வஸ்திரம், இவைகளைக்கொண்டு குருவுக்கு பிரீதியையுண்டாக்கக்கடவான்.

௨௪௭. ஆசாரியன் மரணமடைந்து போனானேயாகில், (சிஷியனானபிரம்மசாரியானவன்)மேன்மையான குணமுள்ள குருபுத்திர னிடத்திலும், குருபத்தினியிடத்திலும், குருவின் ஜ்ஞாதிக ளிடத்திலாகிலும், குருமரியாதையை நடாத்தக்கடவான்.

௨௪௮. மேற்கூரியவர்களில் ஒருவரேனுமில்லாவிடில், ஆசாரியனிட, ஸ்தானம், ஆஸனம், விஹாரம், (இவைகளை சிஷியன்)அடைந்தவனாகி அக்னிசிசுரூஷையைச்செய்து(மோக்ஷத்திற்காக) தன்தேஹத்தை ஸாதிக்கக்கடவான்.

௨௪௯. மேற்கூறியபடிக்கு விக்னமின்றி(இடையூறுவாராமல்) தன்பிரம்மசரியத்தை நடத்தும் எந்தவிப்பிரனும் உத்தம பதவியையே அடைகின்றான்; (அவன்)மறுபடியும் இவ்வுலகத்தில் ஜனிக்கிறதில்லை.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

† ஸ்திரீ, ரத்தினம், என இரண்டுபதமாகவும் வேறுபாடமுண்டு.

மாத்ருவாச்சல்லியம்.

அம்புவியாளும் அரசர்தம்கண்ணிணை
உம்பரையொற்றுஉறங்குவதருமையே.

உருசியசீமாட்டிஒருவள் தன்புத்திரனிடத்துத்தனக்குள்ளவன்பைவெகுவிசித்திரமாக விளக்கினள். அஃதெப்படியெனில்; தன்புத்திரனுடைய இஹபரசுகங்களைவிரும்பினவ

ளாய், வெகுதொல்லைகளால் நிரம்பியவும் பாபத்துக்கு ஏதுவானவும் மிகஉன்னதஸ்தானமாகியசிம்ஹாஸனத்தைப் பெறுவதினின்றும்தடுக்கதன்னால் கூடியமுயற்சிசெய்வதிலேயே சொஸ்கிசக்கிரவர்த்திமரணாந்தம் உருசியதேசத்துப்பிரபுக்கள் முந்தியசக்கிரவர்த்திகளிலொருவனாகிய சார்பிடார்ஸ் வானேவிட்சுஎன்பவனுக்குத்தாய்வம்சத்தில், சமீபபந்துவாகியமைகல்ரோமேனாப்என்னுஞ் சிறுவனுக்கு முடிசூட்ட நிச்சயஞ்செய்துகொண்டு, அவனையும்அவன்தாயாரையும்மாஸ்கோபட்டணம்வரும்படி அழைத்தனர். ஆயினும்அவர்கள்வரமாட்டோமென்றுமறுத்தனர். மேலும்தாயானவள் தன்பிள்ளைமிகவும்பாலியனாயும், அவ்வளவுகடினமான தொழில்புரிய அசக்தனாயும், இருப்பதைப்பற்றி, அவன் சிம்ஹாசனமேறுவதை எவ்விதத்திலாவது தடைசெய்யும்படி தன்சஹோதரனுக்கு கடிதமெழுதிவெகுவிதத்தில் கேட்டுக்கொண்டனள். அன்றியும் இவளுடையவிண்ணப்பங்களைப் பாராட்டாமலே பிரபுக்கள் இவள் குமாரனாகிய மைகல்ரோமேனாவை சக்கிரவர்த்தியாய்நேமித்துவிட்டார்கள். இந்நியமனத்தைத் தங்கள் புதியசக்கிரவர்த்திக்குஅறிவிக்கும்படி தூதர்களாகஅனுப்பப்பட்டபிரபுக்கள் இவள்வாசஞ்செய்த கோஸ்ட்ரோம நகரம்வரவே, அவர்கள்தன்குமாரனை சந்திக்குமுன்பாக, அவர்களோடு ரகசியமாய் சிலவார்த்தைச் சொல்லவேண்டுமெனக்கேட்டுக்கொண்டனள். அவ்வாறேஅவர்கள்சம்மதித்து கோவிலில் சந்தித்தார்கள். அவ்விடத்தில்மீண்டும்இவ்வரியதாயானவள் இரண்டுகண்களிலும் நீர்பெருக தன்குமாரனைப்பார்க்கிலும்ஜனங்களைஆள அதிகசாமார்த்தியமுள்ள மற்றொருவனை நேமித்துக்கொள்ளும்படி அப்பிரபுக்களை பலவிதத்தில் மன்றாடிக்கேட்டுக்கொண்டனள். ஆயினும்ஒருதரம் பூர்த்திசெய்யப்பட்ட இந்நியமனம் மாற்றப்படமாட்டாதென அவர்கள்விடையுரைக்கவே அவள்முகஞ் சோர்ந்து அடியில் வரும் விண்ணப்பஞ் செய்துகொண்டனள். "அப்படியானால்என்பிள்ளைக்கு நீங்கள்கார்டியர்களாயிருந்து காப்பாற்றுவீர்களென வேண்டிக்கொள்வதனோடும்திருப்தியடைகிறேன்: மனிதரையாளும் அரிமையானகலைகளை அவன்கற்றவனன்று; ஆயினும்நீங்களவனைநேமித்து அவனேஅரசனாயிருக்கவேண்டுமெனஅடஞ்செய்கிறீர்கள்; ஆகையால் அவன் உங்களெண்ணங்களை பூர்த்தி செய்யானாயின் உங்கள் நியமனத்தால் உண்டாகும் சகலகாரியங்களுக்குக் கடவுள்முன்பாக நீங்களே உத்தரவாதிகளாயிருக்கவேண்டும். நானோ; கடவுளுக்கும் எனதுநாட்டுக்கும் என் குழந்தைக்குமுள்ளகடமை செலுத்திவிட்டேன்" என்றால் இதனால்விளையும்எல்லாப்பாபமும், இப்பிரபுக்களைச்சேருமேயன்றி, தன்னையும் தன்பிள்ளையையுஞ்சேராதென்பதிவள்கருத்து. ஆகையால் அப்பிரபுக்கள்யாதொருஅக்கிரமம நடவாமல்காத்துக்கொள்ளவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டினள்.

அன்பின்பெருந்தன்மை
அரியையும் வெல்லுமாம்.

பதினேழாவது நூற்றாண்டின் கடையில் பிளாரன்சு கிராண்டியுகின், மிருகச்சாலையிலிருந்து ஒருசிம்ஹமானது, தப்பித்துக்கொண்டு வெளியில்வந்து அந்நகரத்தின்வீதிகளில்உலாவி எங்கும் பயமுண்டாக்கியது. இதன் கோரத்துக்குப்பயந்து ஓடிய ஒரு ஸ்திரீயானவள் அக்கலவரத்தினால்தன் கையிலிருந்தகுழந்தையை நழுவவிட்டனள். இதை உடனே அச்சிம்ஹமானது பிடித்துக்கொண்டது. இத்துன்பத்தைக்கண்ணுற்றதாயானவள் வெறிகொண்டவளாய் அம்மிருகத்தின் முன்விழுந்து தாய்க்குள்ளபாசத்தையெல்லாங் காட்டி தன்குழந்தையைக் காப்பாற்றும்படிகேட்டுக்கொண்டனள். அச்சிம்ஹமானதுநின்று, சற்றுநேரம் அவளைக்கண்ணுற்றுப்பார்த்து, அக்குழந்தையையொன்றுஞ் செய்யாமல் தரையில் வைத்துவிட்டு, அப்புறஞ்சென்றது.

பிரம்மதருமம்.

மூன்றாம் அத்தியயாம்.

(க.) அவன்(சிவமாயும்அமிருதமாயுமிருக்கும்அப்பிரம்மத்தை அறியவிரும்புவோன்)அதைநன்றாய் அறியும்நிமித்தம் (பிரம்மநிஷ்டனாயும் சுகுணனாயுமிருக்கும்) ஆசாரியனையே யல்லவோ அடையக்கடவான். அப்படிப்பட்ட ஞியானமுள்ளவன் (ஆசாரியன்) காமக்குரோதாதிகளை நன்றாயடக்கியவனாயும் இந்திரிய சாஞ்சல்லிய மற்றவனாயும், கிட்டின சிஷ்யனுக்கு எந்தவித்தையினால் நாசமன்றியும் பூர்ணமாயும்ஸத்தியஸ்வரூபமாயுமிருக்கும்பிரம்மத்தை அறிகின்றானோ அவ்வித்தையை யுண்மையாக உபதேசிக்கக்கடவான்.

(உ.) ருக்கு, எஜுஸ், ஸாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களும், சீக்ஷை, வியாகரணம், கல்பம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், என்னும் ஆறுசாஸ்திரங்களும், தாழ்ந்தவையாகையால் அபரமான (சிறந்த

தல்லாத)வித்தைஎன்னப்படும். எந்தவித்தையினால் அந்நாசரஹிதமாகிய (பிரம்மத்தின் ஞியானம்) ஜனிக்கின்றதோ அவ்வித்தை யுயர்ந்ததாகையால் பரமானவித்தை யென்னப்படும்.

(௩.) (ஞியானேந்திரியங்களால்)காணக்கூடாததும், (கர்மேந்திரியங்களால்) கிரஹிக்கக் கூடாததும், குலமற்றதும், (செகப்புமுதலிய)வர்ணமற்றதும், கட்செவிகளற்றதும், கைகால்களில்லாததும், நித்தியமாயும், வியாபகமாயும், ஆகாயத்தைப்போல எங்கும் பரவியதும், வெகு சூக்ஷமமாயும், நாசமற்றதாயுமுள்ள பிரம்மம்யாதோ, சமஸ்தபூதங்களுக்கும் காரணமான அப்படிப்பட்ட பிரம்மத்தை எல்லாவிடங்களிலும் ஞானிகள் காண்கின்றனர்.

(௪.) (ஓ) கார்க்கியே! இதையேயல்லவோ, நாசமற்றதும், ஸ்தூலமல்லாததும், அணுவல்லாததும், ஹ்ரஸ்வமல்லாததும், தீர்கமற்றதும், (இந்நான்கு விசேஷணங்களாலும் பரிமாணம்நிஷேதிக்கப்பட்டது) வெண்மையற்றதும், பெருக்கற்றதும், நிழலற்றதும் தமோ ரூபமற்றதும், வாயுஸ்வரூபமல்லாததும், அநாகாசமாயும், ஸங்கமற்றதும், விரஸமானதும், கந்தமற்றதும், கண்ணில்லாததும், செவியில்லாததும், வாக்கில்லாததும், மனதற்றதும், தேஜோவிஹீனமானதும், பிராணமற்றதும், முகமற்றதும், அளவற்றதுமாயு மிருப்பதாகபிராம்மணர்கள்(என்றால்பிரம்மவாதம்செய்பவர்)கூறுகின்றனர்.

(௫.) ஓ கார்கியே! (அரசனுடையகட்டளையால் இராஜ்ஜியம்முழுதும் எப்படியோ) அப்படியே நாசரஹிதமான இப்பரமபுருஷனுடைய ஆக்கினையால் சூரியனும், சந்திரனும், (இரவிலும் பகலிலும், ஒளியை யளிக்கும்பொருட்டு) தரிக்கப்பட்டவர்களாக நிற்கின்றனர்.

(௬.) ஓ கார்கியே! இந்நாசரஹித (பரப்பிரம்மத்தி)னுடைய ஆக்கினையா லல்லவோ பூமியும், ஆகாயமும் தரிக்கப்பட்டுநிற்கின்றன.

(௭.) ஓ கார்கியே! இந்நாசரஹித(பிரம்மத்தி)னுடைய ஆக்கினையா லல்லவோ நிமிஷங்களும், முஹூர்த்தங்களும், இராப்பகலும், பக்ஷங்களும், மாதங்களும், ருதுக்களும், ஸம்வத்ஸரங்களும், தரிக்கப்பட்டனவாய்வர்த்திக்கின்றன.

(௮) ஓ கார்கியே! இந்நாச ரஹித (பரப்பிரம்மத்தி)னுடைய ஆக்கினையாலல்லவோ கீழ்த்திசையைநோக்கிச் செல்லுகின்றவும் மேற்றிசையைநோக்கிச் செல்லுகின்றவும் நதிகள் வெண்மையான(ஹிமயமலைமுதலிய)பர்வதங்களினின்றும் பெருகுகின்றன.

(௯.) ஓ கார்க்கியே! எவனால் இந்நாசரஹிதனை(பரப்பிரம்மத்தை) அறியாமல் இவ்வுலகத்தில் அநேகவருஷம் ஹோமம், யக்கியம், தபஸ், செய்கிறானோ அவனப்படிக்குச்செய்தும் அச்செய்கையின்பலன் நாசமாய் (என்றால் விபலமாய்)விடுகின்றது.

(௧௦) ஓ கார்க்கியே! எவனால் இந்நாசரஹித (பரப்பிரம்மத்தை) அறியாமலிவ்வுலகத்தினின்றும் பரலோகஞ் செல்லுகின்றானோ அவன் கிருபணனாகின்றான் (என்றால் கிருபைக்குப் பாத்திரனாகான்—அல்லது விலைக்குக் கொள்ளப்பட்ட தாஸனுக்கொப்பாவான் என்பது மிதன்பொருளெனவும்சிலர்) (ஓ) கார்கியே! எவனால் அந்நாசரஹிதனை (பரப்பிரம்மத்தை)யறிந்து இவ்வுலகத்தினின்றும் செல்லுகின்றானோ அவனே பிராம்மணன்.

(௧௧.) (ஓ) கார்க்கியே! அந்நாசரஹிதமான (பிரம்மம் ஒருவனால்) பார்க்கப்படாமல் (தான் அனைத்தையும்) பார்க்கின்றதும், (ஒருவனாலும்) கேட்கப்படாமல் (தான்எல்லாவற்றையும்) கேட்கின்றதும், (ஒருவனால்)நினைக்கப்படாமல்(தானனைத்தையும் நினைப்பதும் (ஒருவனால) அறியப்படாமல் (தானனைத்தையும்) அறிகின்றதுமாகி விருக்கின்றது. ஓ கார்கியே! அந்நாசரஹிதமான (பரப்பிரம்மத்தினிட ஆக்கியையால்) இவ்வாகாயம் குருக்கு நெடுக்காய் (எங்கும் வியாபித்திருக்கின்றது.)

(௧௨) (இப்பிரம்மத்தின்) பயத்தாலல்லவோ காத்துவீசுகின்றது? சூரியன்உதயமாகின்றான்? அக்னி (எறிக்கின்றது?) இந்திரன் (வர்ஷிக்கின்றான்?)மிருத்தியுஐந்தாவதாக சஞ்சரிக்கின்றான். (என்றால் அவரவர் தங்கள் தொழிலை பயத்துடன் நடத்துகின்றார்கள்.)

(௧௩) (பிராணஸ்வரூபமாகிய) பரப்பிரம்ம மிருக்கையில் (பிரம்மாண்டத்திற்குள்பட்ட) இவ்வுலகமெல்லாம் (ஆக்கியைக்குத்தகுதியாய் நியமத்தோடு)நடுநடுங்குகின்றது. (இவ்வுலகம் முழுதும் அவனிடத்தினின்றும்) உண்டாயிற்று. (எதுவானால் ஜகதுத்பத்திக்குக்காரணமாகவிருக்குதொ அது, கொல்லும்பொருட்டுவஜ்ராயுதத்தைக்கையில்கொண்டவனைப்போல்)அதிக பயமுண்டாக்குகின்றதுமாகவிருக்கின்றது. (என்றால்வஜ்ராயு

தத்தைக்கையிலுடையஸ்வாமியைக்கண்டுபிருத்தியநியமத்தால்இவ்வுலகம் ஆளுகைக்கி உள்படுமோ) அவ்வாறுள்ள சந்திரஸூரியநக்ஷத்திரகிரஹாதிரூபமுமவ்வாறேஇவ்வுலகம்முழுதுநியமத்தால் உலகநாயகருடன்இளைப்பாறுகின்றன. அவ்வாத்மாவுக்குச்சாக்ஷியாகியும் ஏகமாயுமிருக்கின்ற அப்பிரம்மத்தைஎவர்அறிகின்றனரோ அவர்கள் அமிருதராகின்றனர், (என்றால் மரணதர்மமற்றவராவார்.)

மூன்றும்-அத்தியாயம் முற்றிற்று.

அமிர்தவசனி.

“அறஞ்செயவிரும்பு”என்கிற வாக்கியத்தை இத்தேசத்திலுள்ள ஜனங்களில் அநேகர் அறிந் திருக்கிறார்கள். ஔவையார் செய்த ஆத்திசூடியின் முதல் வாக்கியமிது. இதன் கருத்து, பாத்திரமறிந்து தருமஞ்செய்ய வேண்டுமென்பதாம். தேவன் நமக்குத்தனசம்பத்துகளைக் கிருபைசெய்வாரானால், அவைகளை வீணில் நாம் செலவிடும்படியாகக் கொடுத்தருளுகிறதில்லை. நம்முடைய நல்வாழ்க்கைக்கும், நம்முடையகுடும்பங்களின் விருத்திக்கும், அவைகளை உபயோகிப்பதுமன்றி, தேவ கைங்கரியமான வழிகளில் அவைகளைச் செலவிடுவதே அவருக்குப் பிரீதியாயிருக்கும். அவருக்குப் பிரீதியாய் இருப்பதையே செய்வது நம்முடைய கடமையாம். இத்தேசத்திலுள்ளவர்கள் தருமகாரியங்களில் விருப்பமுள்ளவர்களாய் இருக்கிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. “ஐயமிட்டுண்” என்கிற நீதிவாக்கியத்தின் கருத்தையுணர்ந்து ஒருகவளம் அன்னத்தையாவது பிச்சைக்காரருக்குக்கொடுத்துப் புசிக்காதவன் இத்தேசத்தில் இல்லை? ஒருவழியிலில்லாவிட்டாலும், மற்றொருவழியில் தருமஞ் செய்யாதவர்களில்லை. ஏழை ஜனங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும், எறும்புராசிகள் இருக்கிற புற்றுகளைத் தேடிப்போய், நெல்முதலியவைகளைப் போடுகிறவர்கள் அநேகர். நோயினால் தவிக்கிறதரித்திரர்களுக்குச் சகாயஞ்செய்யமனமில்லாவிட்டாலும், பருந்து, கூளிமுதலிய பக்ஷிகளை வலிய அழைத்து, மாம்சம், அன்னம் முதலியவைகளைக்கொடுக்கிறவர்கள் அநேகர். ஆதரவில்லாதபக்ஷிகளையொத்த விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும் சிறிது உதவிசெய்ய மனமிரங்காவிட்டாலும், உதிரபுஷ்டியுள்ளவர்களும், சரீரசவுக்கியத்தையுடைய கண்டருமாகிய பிராமணர், பண்டாரங்கள், சாத்தானிகள் முதலியவர்களுக்கும் விசேஷதிரவிய சகாயஞ்செய்கிறவர்கள் அநேகர். “தந்தைதாய் பேண்” என்னும் நீதிவாக்கியத்தை மறந்து, உயிரோடிருக்கையில்தாய்தந்தையர்களுக்குக் கீழடைந்துநடவாமலும், அவர்களை உபசரிக்காமலும், எந்நேரமும் அவர்களுடன் சண்டை சச்சரவு செய்துகொண்டிருந்து அவர்கள் இறந்தபிறகு அவர்கள்நிமித்தம் ஆயிரமாயிரம் ரூபாய்களைப் பிராமணருக்குக் கொடுக்கிறவர்கள்அநேகர். தேவனுக்குப்பயந்து அவனை வழிபட்டு, அவருடைய பிரமாண விதிகளை இந்த உலகத்தாருக்குத் தெரிவிக்க முயற்சிசெய்யாவிட்டாலும் இத்தேசத்தில் கல்வியை அபிவிர்த்திசெய்விக்கப் பிரயத்தனஞ் செய்யாவிட்டாலும் மடாதிபதிகளுக்கும், விக்கிரக ஆலயங்களுக்கும், அவைகளைச்சேர்ந்த தாசிகள், நட்டுவர், அம்பட்டர், பிராமணர் முதலியவர்களுக்கும்விஸ்தாரமான திரவிய சகாயம்செய்கிறவர்கள் அநேகர். இப்படியே இன்னம் சோதிப்போமானால், நம்முடைய தேசத்தில் நடந்தேறிவருகிற தருமங்களுக்கு அளவில்லையென்று சொல்லலாம்.

இப்படி அளவில்லாத தருமங்கள் நாள்தோறும் நடந்து வந்தபோதிலும், பாத்திர மறிந்து செய்யப் படுகின்ற தருமம் மிகவும் கொஞ்சமாயிருக்கிறதென்று நினைக்க இடமுண்டு. தரித்திரத்தினால் வருந்திவருகிற ஏழை ஜனங்களுக்கு உதவி செய்து ஆதரிக்க வேண்டியது நம்முடைய கடமை. ஆனால் தரித்திரர்களுக்கு உதவி செய்வதற்குமுன், அவர்களுடைய தரித்திரதசைக்குக்காரண மென்னவென்று விசாரித்தறிவது அவசியம். இராஜீகதெய்வீகத்தினால் ஒருவன் சிறுமையடைந்திருந்தாலும், தேகஅவயவங்கள் பின்னப்பட்டிருந்து உழைக்கச் சக்தியற்றவனாயிருந்தாலும், வயதில் முதிர்ந்த விருத்தாப்பியனாயிருந்தாலும், நோயினால் சங்கடப்பட்டு வேலைசெய்யச் சக்தியற்றவனாயிருந்தாலும் அப்பேர்ப்பட்டவனுக்கு உதவிசெய்வது சத்பாத்திரமாயிருக்கும். இவனுடைய தரித்திரத்திற்குக் காரணகர்த்தன்இவனல்ல. ஆனால் சூதாடியம், கள், சாராயம் முதலானவைகளைக் குடித்து, விபசாரங்களில் உழன்றும் வருகின்றவன் தரித்திரனானால், அவனுடைய தரித்திரத்திற்கு அவனே காரணகர்த்தன். அவனுடைய துர்ப்புத்தியினால் விளைந்த சீர்கேட்டின் பலனை அனுபவிக்கவேண்டியவன் அவனேயொழிய நாமல்ல. சிலர் சோம்பலுக்கு அடிமைகளாய் வேலைசெய்து புசிக்க மனமில்லாதவர்களாய்ப் பசியெடுக்கும்போது வருத்தமடைகிறார்கள். வேலைசெய்யாதவன் சாப்பிடலா

காது என்னும் பிரமாணத்தின்படி பசியினால் வரும்வேதனைகளை அனுபவிக்கவேண்டியவர்கள் அவர்களேயொழிய நாமல்ல. இவர்களுக்குப் போசனமில்லாததற்குக் காரணம் சோம்பலேயாகும். அதையொழித்துக் கஷ்டப்பட்டால் இவர்களுக்குப் போசனக்குறை வாராது. அனேகர் பணம் இருந்தும், பணத்தை வட்டிக்குக்கொடுத்தும், வீடுவாசல்களைக் கட்டிக்கொண்டும், தோட்டம் துரவுகளை ஏற்படுத்தி பயிரிட்டும், சுகஜீவர்களாய் சௌக்கியதசையிலிருந்து பணஆசையினால் வேஷம்பூண்டு பிச்சையெடுக்கப் பிரவேசிக்கிறார்கள். இதன்உண்மையைஅறியவேண்டுமானால் வண்ணாரப்பேட்டை, திருவல்லிக்கேணிமுதலியஇடங்களிலிருந்து பிரதிதினம் இந்தச் சென்னபட்டணத்து வீதிகளில் யாசகஞ்செய்யும்படியாய் வருகிற பிராமணர், சாத்தானிகள், பண்டாரங்கள் முதலிய சோம்பேறி ராமனை அவர்கள் இருப்பிடங்களில்போய்ப்பார்த்தால் தெரியவரும். இவர்களில் அனேகர் பிச்சையெடுத்தே பணக்காரராயிருக்கிறார்கள். பிச்சை இடுகிறவர்களுடைய ஸ்திதியிலும், இவர்களுடைய ஸ்திதி நிர்ப்பாக்கியமானதல்ல. இப்பேர்ப்பட்டவர்களுக்கு நாம்உதவிசெய்தால் சத்பாத்திரமாயிராது. இப்பொழுது மேலே குறிப்பாகக் காட்டியிருக்கிற இந்த மூன்றுவகைப்பட்ட பிச்சைக்காரருக்குத் தருமம்செய்தால், அது அதர்ம்மமாக முடியும். அதேதெனில், அவர்கள் தங்கள்துர்ப்புத்தியிலும் துர்மார்க்கத்திலும் துராசையிலும் நாம் உதவிசெய்யுந்தோறும் அதிகமதிகமாய்ஸ்திரப்பட்டுப்போகிறார்களேயொழிய,குணப்படுகிறதில்லை. கெடுதிக்குக் காரணமாயிருக்கிற யாவும் தருமமாகாவாம். நாம் செய்கிற சகாயத்தினால் கெடுதி உண்டாகுமானால் அந்தச் சகாயம் தருமத்தைச்சார்ந்ததாயிராது. நம்மில்இந்தப் பிச்சை யெடுக்கிற கர்விகளுடைய கோபத்திற்கும்,துர்ப்பாஷைகளுக்கும், சாபத்திற்கும் பயந்து உதவிசெய்கிறவர்களாயிருக்கிறோம். இது வீணான பயம். காரணமில்லாமல் ஒருவன் நம்மைத்திட்டினாலும் சபித்தாலும் நமக்கு அதினால் யாதொரு தீங்கும் வராது. அதினால் தீங்குண்டானால் அது அவனையேசேரும். இப்பேர்ப்பட்டவர்கள் நம்மிடத்தில், யாசகஞ்செய்யவந்தால், அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லியனுப்புவதே தர்மமாயிருக்கும்.

சிலர் தங்கள்ஜீவனும்சைக்காக உழைக்க மனமுடையவர்களாயிருந்தும் அதற்குவேண்டிய சம்பாத்தியம் கிடைக்காமல் வருத்தமடைகிறார்கள். இவர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்து பிழைக்க வழிகாட்டவேண்டும். உழைத்து ஜீவனஞ்செய்யச் சத்தியில்லாதவர்களாகிய பாலகரையும்; நோயாளிகளையும், அவயவக் குறைவு நேரிட்டுத் தவிக்கிறவர்களையும் நம்மால் கூடியவரையில் ஆதரிக்கவேண்டியது நம்முடைய கடமை. அவர்களை அன்பாய் ஆதரித்து அவர்கள் சரீர போஷணைக்கு வேண்டிய நல்லுணவுகளையும், ஔஷதம், வஸ்திரம் முதலியவற்றையும் கொடுத்து உபசரிப்பதுமன்றி, இவ்வுலகத்தில் அவர்கள் துன்பம் அடைந்திருந்தபோதிலும்இம்மையிலாவது மறுமையிலாவதுநல்லகதியடையத்தக்கஉபாயத்தை நமக்குத்தெரிந்தவரையில் தெளிவாய் அவர்களுக்குப்போதித்து, அவர்களுடைய ஆத்துமத்தின்சுகத்தையும்உருதியாசத்தேடவேண்டும். இப்பட்டணத்தில் பூரிகொடுக்கப்போகிறோமென்று சொல்லிஓர்இடத்தையும்நாளையும் நியமித்துத் திரளான கும்புகளைக் கூட்டி ஏக ஆடம்பரத்துடன் கொடிகள் போட்டு, போலீஸ் சேவகரைப் பாராவைத்து திரளான ஏழை ஜனங்களை யொன்றாகக் கூட்டி, மூன்று ஜாமம்வரையில் அடைத்துவைத்து, ஒருகையில் கொறடாவையும், மற்றொருகையில் பைசாவும் எடுத்துக்கொண்டுபோய், குளிர்ந்த முகம்காட்டாமலும், இனிய வார்த்தைகளைச் சொல்லாமலும், கால் அணா, அரை அணாவை விசிறியெறிந்து மேல் விழுந்து எடுக்கிற ஏழை ஜனங்களைக் கொறடாவினாலடித்து,துர்ப்பாஷைகளாடி, கழுத்தைப் பிடித்து நெட்டிதள்ளுகிற வழக்கம் நாளுக்குநாள் விர்த்தியாகிக்கொண்டே வருகின்றது. பளிச்சென்று பத்து ரூபாய்வரையில் ஏழைகளுக்குக் கொடுக்கச் சக்தியில்லாதவனெல்லாம் பூரிகொடுக்கிறேனென்று வெளிச்சம் போடுகிறான். இது தர்மத்தைச் சேர்ந்ததல்ல. வீண்டம்பத்தைச்சேர்ந்தது. இதனால் வினையும் பயனை இவர்களடைந்தே வருகிறார்கள். "இலையெனவிரப்பவர்க் கீயுஞ்செங்கரம் அதிலறியாவகையளித்தனன்று" என்னும் நீதிவாக்கியத்திற்கிணங்க, நாம் எளியவர்களை வலதுகையால் ஆதரிக்கிறோமென்பது இடதுகைக்கும் தெரியலாகாது. இந்தத் தேசத்தில் தமது பிரதிநிதியை ஏற்படுத்தி அரசாட்சி செலுத்திவருகிற மகிமைப் பிரதாபமுள்ளகாருண்ணியபரையாகியஇராக்கினியவர்கள் எத்தனையோதர்மங்களைப்புரிந்துவருகிறார்கள்; எவ்வளவோ தனத்தைப் பிரதிதினம் செலவிடுகிறார்கள். எவ்வளவோ சரீர கஷ்டத்துடன் நல்ல காய்கறிபதார்த்தங்களைப் பயிரிட்டுச் சமைத்து, தாமே ஏழைகளிருப்பிடத்தைத் தேடி, சுமந்துகொ

ண்டுபோய்ப் பரிமாறிவருகிறார்கள். எத்தனையோ வஸ்திரங்களைத் தமது சொந்தக் கைகளால் தைத்து, ஏழை ஜனங்களுக்குக் கொடுத்துவருகிறார்கள். எத்தனையோ நோயாளிகளுக்கு ஔஷதம்முதலிய நன்மைகளைக் கொடுத்து உதவுவதுமன்றி, வேதவாக்கியங்களை வாசித்தும் பிரார்த்தனை செய்தும் புத்திமதிகளைச்சொல்லியும் ஆதரித்தும் வருகிறார்கள். இத்தனை தருமங்களைச் செய்து வருகிறவர்கள் இன்னாரென்று அந்த ஏழை ஜனங்கள் அறியார்களாம். யாரோ ஒருசாமான்னியமான ஸ்திரீயைப்போலச் சென்று உபசரித்தால், மஹா இராச்சினியென்று ஏழை ஜனங்கள் அறியாமற்போவது ஆச்சரியமல்லவே. நாம் செய்கிற தர்மம் எவ்வளவு அற்பமானதானாலும் அமரிக்கையோடும் மனிதர்களிடத்தில் பிரீதியோடும் செய்யக்கடவோமாக.

திருபம்.

ஓம்வாஸுதேவாயநம:.

நன்னயமிக்கநூல்
　　நாவலர்வாழும்,
சென்னையிலுதித்துச்
　　செகமுழுதும்போய்ப்,
பன்னுதற்கரிய
　　பழமறைப்பொருளின்,
இன்மையையாவரும்
　　உணரவிளக்கி,
மன்னுமஞ்ஞானம்
　　மனவிருளகற்றும்,
தத்துவபோதினிக்
　　கர்த்தரவர்கட்கு,
இன்புடன்நாளும்
　　இதமுறத்தந்தனம்,
அன்புடன்யாரும்
　　அசமகிழ்வந்தனம். !

ஐயா!!!

யான் இங்குகண்டு களிப்புற்ற அற்புதங்களை என்சோதரர்களும்அறிந்து ஆநந்தமடைய அவாவுவார்கள்எனநம்பினவனாய், யான் இதனடியில்வரையும் சிலவரிகளைத் தங்கள் பத்திரிக்கையின் ஒருபக்கத்தில்பிரசுரஞ்செய்யும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

௧௮௬௫வு - டிசம்பர்மீ - ௩௦உ - ஸ்திரவாரம்முதல் கடவுளின் பரிபூரண கிருபையினால், இத்தஞ்சைமாநகரிலும் ஒரு ஸமாஜமேற்பட்டு நடந்தேறிவருகிறது. இதற்காதிகராண புருஷர்களாகிய பட்டுக்கோட்டைதாலுகா பாடசாலை இரண்டாவது உபாத்தியாயராகிய ம-ா-ா- நடராஜபிள்ளையவர்களும். மேற்படி இடத்திலுள்ள தந்தித்தபாலாபீஸ்தலைவராகிய ம-ா-ா- பினாகபாணிமுதலியராவர்களும் சென்னை கல்குத்தாமுதலிய இடங்களிலிருந்து பலபுத்தகங்களும் வரவழைத்துக் கொடுத்து தங்களாலியன்ற சகாயம் செய்துவந்தனர். இவ்விடத்து ஹைஸ்கூலில் ஒரு உபாத்தியாயராகிய த. சு. கிருஷ்ணசுவாமிஐயரென்பவரும் மற்றும் சிலரும் தலைமையாக ஏற்பட்டு நடத்திவருகின்றனர். அதில் நடந்துவரும் கிரமங்களாவன.

வாரந்தோறும் சனிக்கிழமை சாயங்காலம் ஏழுமணிக்குத்துவக்கி பத்துமணிவரையில் சபைகூடி துவக்கத்தில் ஸமாஜத்திற்குரிய பிரார்த்தனைகளைச்செலுத்தி, பின்பு பிரும்மதருமமும், தத்துவபோதினியும், தாயுமானவர்பாடலிற்சிலதும் வாசித்துக்கடைசியாய் ஓர் ஸ்தோத்திரத்தை வாசித்துசபை சம்பூர்ணமாவது வழக்கம்.

கொஞ்சகாலத்திற்குமுன் பட்டுக்கோட்டையிலிருந்துஇவ்விடத்திற்குவந்திருந்த தாலுகாஉவர்ஸீயரும், ஸமாஜாபிவிர்த்தியையும், தேசநன்மையையும் சதாதம்மனதிற்கொண்டவரும், ஆன ம-ா-ா-கிருஷ்ணசுவாமிநாயகரவர்கள் ஆதித்தியவாரசபை ஒன்று கூடும்படி தூண்டுதல்செய்ததின்பேரில், கடந்தஞாயிற்றுக்கிழமை பகல் மூன்றுமணிக்கு சபைகூட்டப்பட்டு அதில்ஸமாஜத்தைச்சேர்ந்தோரும்மற்றும்பலரும்கூடியிருந்தனர். அச்சபையில் வழக்கப்படி த. சு. கிருஷ்ணசாமிஐயர் சபாநாயகராய்வீற்றிருந்தார். ஸமாஜத்திற்குரிய பிரார்த்தனையைஅவர்முடித்தவுடனே காரியதர்சியானவர் எழுந்து கடவுளைநோக்கிப்பிரார்த்தித்துப் பின்வரும்விண்ணப்பத்தைச் செய்துக்கொண்டார். முடிந்தவுடனே, வேதஸமாஜத்தாரால் இயற்றப்பட்ட இரண்டாவது விண்ணப்பத்தின் முகவுரையும், முதல்அத்தியாயமும் வாசித்து முடிக்கப்பட்டன. பிறகுபிரார்த்தனை ஒன்று செலுத்தி ஆறரைமணிக்குசபைகலைந்தது.

காரியதர்சியின் விண்ணப்பம் வருமாறு.

ஓம்வாஸுதேவாயநம:.

ஓ! அருள்நிறைந்தகடவுளே! சிறுவர்களாகியயாங்கள் இன்று இங்குதுவக்கும் இச்சபையானது நாளுக்குநாள்விர்த்தியாய், சா

துக்களால் நிரம்பிப்பூரணப்படவும், உன்னுடையகிருபை சதா அதைச்சூழ்ந்திருக்கவும் அருள்புரிவாய். நாங்கள் ஒவ்வொருவரும்உலக அவாவைப்பெருகச்செய்யும் விக்கிரஹ ஆராதனையைநிக்கிரகஞ்செய்து, எகநித்திய நிர்மலஆநந்தசொரூபராயும், மனம்வாக்குக் காயங்களுக்கு அகோசரமாயும்குணங்குறிகடந்துசர்வஜ்ஞராயும்இருக்கிறநின்னைஒருவனையேஅறிந்து தொழும்படியானஅறிவைஎம்மில் ஒவ்வோரகத்திலும் ஊர்ச்சிதப்படுத்தி அருள்வாய். நாங்கள்எல்லோரும், துன்பத்தில்மூழ்கினும், இன்பத்தில்ஆழ்கினும் ; வறுமையை உறினும், ஐசுவரியம்பெறினும்; எச்சமயத்தும் விடாமுயற்சியோடு கூடிஉன்னால் விரும்பப்படாதனவற்றைத் தியஜித்து நீ விரும்புவனவற்றையே செய்து வரும்படியான திடசித்தத்தைத்தந்தருள்வாய். நாங்கள்நாள் தோறும்அறிவில்தேர்ச்சியடைந்து, பூரணராய் உனது ஞானத்தைப்பெற்று ,கடையில்உன்திருவடியையடைந்துபிரம்மாநந்தத்தைஅநுபவிக்கத்தக்க பாத்திரவான்களாகும்படிஉதவுவாய் ? ஓ ! ! சர்வஜ்ஞனாகிய கர்த்தனே ! ! !

சோதரர்களே ?

இங்கு எனது வினயமான விண்ணப்பத்திற்குச்செவிகொடுத்து அதிலுள்ளவழுக்களை நீக்கி என்னைமன்னிப்பீர்களென நம்புகிறேன். நம்மை இன்று இங்ஙனம் ஒருங்ககூட்டியதற்காகக் கடவுளுக்கு நன்றிசெலுத்தக்கடவோம். நம்மில் அநேகர் நம்வாழ்நாளின் பெரும்பான்மையைஉலகவின்பத்துக் கேதுவாகியபலதொழிலைச்செய்வதிலேயேபோக்கிநம்மைநாமே மோசம் போக்கிக் கொண்டோமென்பதற்கு ஐயமில்லை. நாம் இப்படியே நம் ஆயுளின் மீதியானபாகத்தையும் செலவிடாதிருக்கும்படிபரிபூரணராகியகடவுள்அனுக்கிரகம்செய்வாராக. இதுவனாநம்மை நாமும் அறியாது அவம் போனது மெத்தபு துமை! இனியாவது நாம் எத்தன்மையுடையரெனச் சற்று ஆலோசித்துப்பார்ப்போம். "எண்ணரியபிறவிதனில்மானிடப்பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்" என்று தாயுமானவர்திருவாய்மலர்ந்தருளியபடிக்கடவுள்சிருஷ்டியின் கோடான கோடிசீவன்களிலெல்லாம் மானிட ஜன்மமே மிகஉத்கிருஷ்டமானதென்று நாமெல்லோரும்ஒத்துக்கொள்வோம். அப்படிமேன்மையாகியஅரிதான மானிடதேகத்தைப்பெற்ற நாம் சிருஷ்டி, ஸ்திதி, லயகாரணபூதனாய், ஆதிமத்தியாந்தரகிதனாய், ஸர்வசக்த ஆனந்தமயமான பரப்பிர்ம்மத்தையறிந்து அவனது அருளைப்பெற்றுமோட்சத்தையடையப்பெறுவிடில் நாம் உய்யுமாறெங்ஙனே? நாம் எவ்வளவு காலம் இவ்வுலகத்திலிருப்போம். நம்மாயுளுக்குஓர்வரையறையிருந்தாலும் சிலகாலம் வரை சும்மா கவலையற்று இருந்தவிட்டுஅப்பால் கடவுளையும் நம்மையும் அறியும்படி முயற்சிக்கலாமென்று சொல்லலாம். நம்போல்வரும் நம்மிளையோரும் முதியோரும் இறந்துபோவதைப்பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறோமல்லவா ? இன்னம். ௧0-வருஷமோ அ-வருஷமோ- உ-மாதமோ - ௧- மாதமோ நாளைக்கோ இன்றைக்கோ அல்லது இந்த க்ஷணந்தானோ எந்நிமிஷமோ நாமிறப்பது. "உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி, விழிப்பதுபோலும் பிறப்பு" எனதிருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இந்தநிமிஷமே யிறந்துபோவோமாயின் என்னசெய்கிறது ! அப்பாலிம்மானிடதேகத்தைப் பெறுவோமெனயாருறுதியோடு உரைக்கற்பாலர் ! ஆகையால் நாம் வீணாய் நாளைக்கழிப்பது உசிதமன்று. எச்சமயத்தோரும் புண்ணியபாவம் மோட்சநரகமுண்டென்றும், புண்ணியத்தின்பலன் மோட்சமென்றும், பாவத்தின்கூலி நரகமென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்தஅநியாயத்துக்குஎன்னசெய்கிறது ! நமதிஷ்டப்படி யெதையுஞ் செய்துகொண்டிருக்கலாமென்று ஏற்படலாகாதா ! மோட்சத்தையும் நரகத்தையுங்குறித்துப் பேசவேண்டிய தென்னவென்று சொல்லுவோமாயின் அதுசரியல்ல. மோட்சத்தின் இன்பத்தையளவிட்டாலும் நரகத்தின் துன்பத்தைக் குறிப்பிடமுடியாதென்றமட்டும் உறுதியாகச் சொல்லக்கூடும். நரகவேதனையை நாம்கண்ணாலேபார்த்தால் அல்லது ஒருவர் நேரேபார்த்துவந்து ஸாட்சியிட்டாலொழிய நம்பத்தக்கதில்லையென்று சொல்வோம். ஆனால் நாம் நாடோறும் பிரத்தியட்சமாகஅறியக்கூடிய மரணவேதனையையும் மறுக்கநம்மாலாகுமோ? "யானேதும் பிறப்பஞ்சேன், இறப்பதனுக்கென் கடவேன்" என்று மாணிக்கவாசகர் சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் அஃதையாவதுஉன்னி மரணத்துக்காயத்தப்படவேண்டாமா? என்றுகூடியும் சாவது நிச்சயம். "இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணிநெஞ்சே" என்றவண்ணமாய்ப் பட்டணத்தாரும் சொல்லியிருக்கின்றார். ஆனதன்மையினால் கூடிய சீக்கிரத்தில் நம்மைச் சீர்படுத்திக்கொள்ள முயலக்கடவோம். நம்மனம் உலகவின்பத்தை நாடுவதில் எவ்வளவு வேகமாய்ச் செல்கின்ற தோ

அவ்வளவுக்குத் தேவனையறியு மறிவிற் பின்வாங்குகின்றது. பொருளையவாவி உத்தியோகத்துக்காக விசேஷபரிக்ஷை முதலிய கொடுப்பதற்கு நாம் எவ்வளவு முயற்சி யெடுத்து நம் ஆசார நியமங்களையும்விட்டு இராக்கண் விழித்து இவை போன்றபலகடினமான தொழிலைச் செய்கின்றோம். இப்படி கடினமான முயற்சி செய்யும் நம்மால் அனேகர் அதின்பலனை யடைதற்குமுன் னிறந்து போய்விடுவதையும் நாம் அறிந்திருக்கின்றோமல்லவா? ஆ! இவர்களுடைய உழைப்பு என்னபலனைத்தந்தது. ஆனாலும் ஒருமுயற்சியுஞ்செய்யாதிருப்பதைவிட இப்படியாவது செய்வது நன்மைதானென்று நாம் ஒத்துக்கொண்ட போதிலும் ஒருக்ஷணத்திலழிந்து போவதாகிய இத்தேஹத்தைச் சம்ரட்சணை செய்வதினாலுண்டாகும் கிஞ்சித்துசுகத்துக்காகநாம்இவ்வளவுமுயற்சி செய்துவருவோமானால் நித்தியமாயும்அழிவற்றதாயுமிருக்கிற நம்மான்மாபரமசுகத்தையடையஎவ்வளவுகவலையோடு முயற்சிசெய்யக் கூடியவர்களா யிருக்கின்றோமென்பதைமட்டும் இவ்விடத்தில்குறிப்பிட வேண்டியதா யிருக்கிறது. ஆகையால் இன்னமும் நாம் வீண் நாள் போக்காமல் சீக்கிரத்தில் பரப்பிரம்மத்தையறிந்தானந்திக்க முயலக்கடவோம். நம்மவரிற்பலரும் நான் உயர்ந்தவ னென்றும் நான்தான் இன்னகர்மத்தைச் செய்யத் தகுந்தவனென்றும் ஆணவம் படைத்து அறிவுமழுங்கி கிருத்தியா கிருத்தியந் தெரியாமல் உலகமாயையில் மூழ்கி ஆங்காரம் மீறி ஒருவரை யொருவர் பகைத்து பொறாமை கொண்டு திரிவதினாலல்லவா நம்மவரிலநேகர் கிருஸ்தவராயும் மகமதீய்யராயும்போய் நமக்குள்ள சகல அந்நியோந்நியங்களையும் நம்மவர் முன்னனுபவித்த சர்வசிலாக்கியங்களையுமிழந்து நமது சுயாதீனம் போய் அந்நியருக்கடிமையானோம். இதற்கெல்லாம் நமது மடமையும் புத்தியீனமுந்தானே காரணம். நம்மை ஆளும் ஐரோப்பிய கனவான்களைப்பார்த்தாவது நம்மொழுக்க வழக்கங்களைச்சீர்படுத்தி நாமனைவரும் ஒருமைப்பாடடைந்து சுகித்து வாழலாகாதா? நம்மவர் ஒருமைப்பாடென்னுங் காப்பை மீண்டு மடைந்து சுகமடைய வேதஸமாஜத்தாரும்பிர்ம்மசமாஜத்தாருஞ் செய்துவரும்முயற்சிக்கு நாம் எவ்வாறு கைம்மாறுசெலுத்துவோம். வேதார்த்தங்களெல்லாம்சிறுபாலன்முதலாய் அறிந்துகொள்ளும் விதமாய்ப் பற்பல பாஷைகளில் மொழிபெயர்த்து அச்சியற்றிப்பிரசுரஞ் செய்யும் கனவான்களது பெருமையை யென்னென்று சொல்லுகிறது.

நாமெல்லா மூய்யும்வண்ணம் இம்மகான்கள் கருணைகூர்ந்து இவ்விதநன்மை செய்து கொண்டு வருவதற்காக நன்றி யறிவுள்ளவர்களாயிருக்கிறதற்குப்பதிலாக அவர்களைப் பலவாறு வீணாய் தூஷித்துத்திரிகிறோம். இதுநமக்குஅடுக்குமா! நம்மவரில் வேதாந்தங்களெல்லாமறிந்த நிபுணர்களாகியபலபெரியோரும்இவர்கள்சொல்வதுஸத்தியமென்றே உண்மையோடுரைப்பதுதெரிந்தும்நாம் மறுப்பது என்னவோ! நாம் பிறரை யேமாத்தி அவர்கள் பொருளைக் கிரகிப்பதற்குமட்டும் இது தடையாயிருக்குமேயன்றி வேறு எந்தவிதத்தில் இதுதடையென்றுசொல்லகூடும். மற்றும் நாம்இதவரையியற்றிவந்தசிலதுஷ்கர்மங்களைநிவர்த்திப்பதில்பலருடைய துவேஷம்வந்து சம்பவிக்கிறதேயென்றுஞ்சிலர் சொல்லலாம். ஆனால் நாம் ஒவ்வொருவரும் துரபிமானமற்று யதார்த்தமனதுடன் யோசித்துப்பார்ப்போமானால் இதுவெல்லாம்அதற்குமுகாந்திரமாமோ! நாம்ஒருவருக்கொருவர் பொறாமைப்பட்டுப் பொய் பேசி ஒருவரை யொருவர் அவமதித்து, ஏமாத்தி, வஞ்சித்து, வருத்திப் பொருள்சம்பாதித்து அதினாற்சுகத்தை யடையலாமென்று நினைப்பதைவிட ஒருவருக் கொருவர் அந்நியோந்நியமாயிருந்துகொண்டு ஒருவரை யொருவர் மதித்து, நேசித்து, எல்லாருமாய்ச்சுகித்துவாழ முயலுவோமாயில் அதில்இவ்வளவு ஆனந்தம் இருக்கிறதென்று ஒருவர் சொல்லவும் வேண்டுமோ! இதையெல்லாம் ஒருவர் எடுத்துரைக்கும்போது நமது துரபிமானத்தால் ஆங்காரம்மீறி சரிதி கிரியை, யோகம், ஞானமென நால்வகைக்கிரமம் ஏற்பட் டிருக்கிறபடியால் படிப்படியாய்த் தான் ஞானத்தையடையவேண்டுமென்று ஒன்றையும் அனுஷ்டிக்காது சோம்பலாய்த்திரிவதற்கேற்கச் சொல்லிவாயாடித்திரிவதுமன்றிப் பசுவையடித்துப் பிரரமணனுக்குக் கொடுஎன்பதுபோல் கொல்லுங்கொலைபழி பாவத்துக்கஞ்சாமல்பிறரைவஞ்சித்துப்பொருள் சம்பாதித்துத் தேவபக்தி யுள்ளவர்களைப்போல் வெளியாடம்பரமாய் விக்கிரகங்களுக்குச் சிலநேர்த்திக்கடனைச்செய்வதினால் நாம் செய்யும்பாவங்களுக்கு விமோசனமாகித்தேவதண்டனைக்கு முற்றிலுந்தப்பித்துக்கொள்வோமென்றெண்ணிநாம் மனதிற்கியைந்தபடி யெதையுஞ் செயயத்துணிகின்றோம். நாம்செய்யுஞ்சாஸ்திரசம்மதமானதர்மமே நமதுகடைமையாகமுடியுமென்றுஏற்படுகிறத்தில் சட்பஇதுவெல்லாம்நமதுபாவத்துக்குப்பிணையாகுமென்று நினைப்பதுயாருக்குத்தான்புதுமையாயிராது! ஆகையால்

நாமெல்லோரும் ஒருமித்துப் பாடுபட்டு உண்மையையறிந்து ஸத்தியஞானாநந்தத்துவஞகியபரப்பிர்ம்மத்தில் மனதைச்செலுத்திஅவரது அருளைப்பெற்று மோட்சஸாம்பிராஜ்ஜியத்தை யடையக்கடவோம். அப்படியே அந்த நித்திய நிர்மல ஆனந்த அகண்ட பரிபூரண கிருபாநிதியாகிய பரபிர்ம்மம் அனுக்கிரகிப்பாராக. ஓம்தத்ஸத்.

ஐயா?

இன்னமும்ஒருசமாசாரத்தையிவ்விடத்துக்குறிப்பிடுகிறேன். அஃதாவது, இத்தஞ்சையையடுத்ததிருவையாறுஎன்ற பஞ்சநதக்ஷேத்திரத்திலும்சிலமாதகாலமாய் ஸமாஜமொன்று ஏற்பட்டு நடந்தேறிவருகின்றது. அதில் மேற்படியூர் தாலூகாபாடசாலைதலைமையுபாத்தியாயராகிய. ம - ா ா. கார்த்திகேசம்பிள்ளையவர்களும் இரண்டாவது உபாத்தியாயரும் ஸம்ஸ்கிருதபாண்டித்திய முள்ளவருமான ம - ா - ா - சாமாவையரவர்களும் தலைமையாயிருந்து நடத்திவருகிறார்கள்.

இப்படிக்கு தஞ்சை வேதஸமாஜ உபகாரியதர்சியும் ஷெ யூர் ஹைஸ்கூலி லோர் உபாத்தியாயருமான.

கஅகூகூ - ஸூ }
சூலைமீ - உஙஉ } வெங்கிடராமய்யர்.

நிருபம்.

ஓம்பரப்பிரம்ஹணேநமஃ.

நேரிசைவெண்பா.

இஷ்டரேவேதம்இயம்புவதுஓம்பிரும்ம.
வஸ்துவேநாளுமனதிற்கொண்டு - பக்ஷமாய்,
காலைநடுமாலையினில்காதலித்துப்போற்றுவதே,
வேலையெனக்கொள்வோம்விரைந்து.

கீர்த்தனம்.

இராகம் - அடாணா - ஆதிதாளம்.

பல்லவி.

பஜனைசெய்வோம்நேயரே - ஓம்ரபிம்மத்தை,
பஜனைசெய்வோம்நேயரே.

அநுபல்லவி.

சிருஷ்டிதிதிசங்-காரகுணத்திற்கு,
சிரயன்அரிஅர-னென்றுநாமமுள்ளதை... ...(பஜனை.)

சரணங்கள்.

க. விண்டலமண்டல-மாதிவகுத்தோனை,
வேதமுடியில்-நடித்திடுந்தாளனை,
கண்டோர்கருத்திற்-பொழியுமமுதனை,
சருதாதவர்க்குத்-தொலைதூரமானோனை......(பஜனை.)

௨. அயனேமுதலென்றும் - அரியேஆதியென்றும்,
அரனெஅநாதியென்றும் - அனர்த்தம்புரிவோர்க்கு,
நயமாகமூன்றுக்கும் - நாதன்பிரும்மமென்றே,
நவிலவேதம்போதித்து - நாமும்அவர்களும்...(பஜனை.)

௩. பொய்கொலைகாமாதி - புரிவதைவிட்டொழித்து,
புநிதகாரியங்களை - பொருமையாய்நடப்பித்து,
மெய்மையுடனேபல - திருநாமந்தோத்திரித்து,
வீடுபெறவேஅதன் - அருளையேபார்த்திருந்து.(பஜனை.)

இஃது பெங்களூர், ஆ - ஐயாசாமிமுதலியாரியற்றியது.

சமாஜவந்தனம்.

ஆசிரியவிருத்தம்.

௧. ஆதியந்தமுமிலாவாதிமூலப்பொருளே ஆநந்தவருள்பெருக்கே,
அடியருனைதொழுதேற்றஆவலொடுகூடியது அய்யநினதருளாசியே,
சோதியேஎமையுற்றதொல்லைபலவற்றினால் சோர்ந்துநின்பாதமணுகி,
துதிசெலுத்தும்நல்லசமயமிதைபாவலொடு தொடரவெதிர்பார்த்திருந்தோம்,
வாதிக்குஞ்சமயங்களறியாவபேதமே வன்மையுளவுயர்தெய்வமே,
வடியருஞ்சாநித்தியவைபவமுணர்ந்தின்று வாழ்த்தவகையருள்புரிகுவாய்,
போதிக்கவருவேதபொர்ப்பினிலுதிக்கின்ற பொலிவுற்றபெருஞாயிறே,
பூரணமதாயெங்குபரவிடும்பெருநட்பே பொருளற்றசிற்றுருவமே.

௨. எமதுகண்காண்கின்றஎவ்வகைப்பொருளிலும் ஏகமாய்நின்றுபின்னும்,
எமதுள்ளமலர்மீதுஏகிகுடிகொண்டனை எங்குநிறைகின்றதேவா,
சமமற்றநினதருள்முகமதிப்பூரணம் தண்ணொளிபரப்பவெங்கும்,
தரையிலுளவஞ்ஞானந்தானகிநீங்கிட தயைசெய்துகாக்கின்றனை,
விமலனேநின்ஸர்வவியாபகச்சின்மய விலாசத்திலெமதாத்துமா,
விந்தையொடுபூரித்துலபமாகிநின்னுடைய விமலத்வமடையவருளி,
அமலையொடுகோஷிக்குசமயநெறிபேய்களெமை அமரிலாழ்த்தாதவண்ணம்,
ஆநந்தகரமாமயேதநிலைபோதித்து ஆளுவாய்எமதப்பனே.

௩. நினதுதெய்வீகப்பெருந்தன்மையுன்னவே நினைவுகோடாமலென்றும்,
நின்பாரிசுத்தியமெனுநீர்கொண்டுஎமையுற்ற நிந்தைபடுவுலகவாசை,
தனகனப்பொருளாசைதகையற்றபேராசை தயவுடன்நீக்கவருளாய்,
தரைமீதுலின்றுனதுதாழ்பணிந்தடைகின்ற சதமானபேரின்பமே,

தினமளவதாகாதெத்தினமெமதுவாழ்நாளை சீர்படுத்தினியதாக்கி,
திருவுளப்பற்றென்றுமெமைவிட்டுநீங்காது திண்மையொடுநிற்கவருளாய்,
கனமானநின துரக்ஷணையானசாயலில் கர்த்தனேஎமையிருத்தி,
கடுவெப்பமுளபாவவெயிலால்தபிக்காது கடுகிநினையுறநடத்தாய்.

௪. துன்பமும்துக்கமும்தீமைஎமையுற்றுழி துணைபடுமுற்சாகமாவாய்,
தீதுற்றவுலகவருள்தன்னிலெமதொளியாகு திவ்வியதேஜப்பெருக்கே,
வன்மாயைமோகத்தினின்றெம்மைகாத்திடும் மகிமையுளகவசமாவாய்,
மற்றுமெமதுள்ளத்துநேயமும்அன்புமே மிகவளர்ந்தோங்கசெய்து,
இன்பமொடுஎமதுவிவகாரங்கள்யாவையும் யாதினும்மேன்மைபடவே,
என்றுமெமைவாழ்த்தியேஏகசோதரவாஞ்சை ஏழையேமடையவருளாய்,
நின்பெரியதிருவுள்ளமகிழ்கின்றநன்மையே நேசித்துயாங்கள்செய்து,
நின்னையேசரணுற்றுநித்தியநிர்மலமான நீதிநெறியடையவருளாய்.

௫. அந்தமில்லாதவுலகத்தினையுமன்புடன் ஆள்கின்றஆண்மையுளனே,
அன்னைபோலெமையென்றுநின்னுடனிருத்தியே அனுதினம்காத்தருளுவாய்,
எந்தையேஏகமாய்எங்குமேநிறைகின்ற எம்பெருமனுகுதேவா,
என்றுமெம்முடனிருந்தெமதன்புகோடாது ஏதுவுண்டாகசெய்வாய்,
சந்ததமும்யாவரும்சமயம்கடந்தசிவ சத்தியமார்க்கம்பெறவருள்,
சத்துசித்தாநந்தமயமானநினதரிய திருநாமதிவ்வியாமுதம்,
புந்திக்குளின்பமுறபிரதிநாவும்நுகரவே பூரணபிரபுத்வமோடு,
பொலிவுற்றுஒவ்வோரகத்திலுங்குடிகொண்டு போகசாம்ராஜ்ஜியமாளாய்.

———

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.
மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால், பதிப்பிக்கப்பட்டது.